28.12.2016

தினமணி

**காற்றழுத்தத் தாழ்வு நிலை: தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு**

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு அந்தமான் மற்றும் அதை ஒட்டியுள்ள கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு உருவாகியது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலையானது தற்போது இலங்கை அருகே நிலை கொண்டுள்ளது. வர்தா புயலானது ஈரப்பதத்தையும், காற்றின் அழுத்தத்தையும் கொண்டு சென்றுவிட்டதால், வங்கக் கடலில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு நிலைகள் வலுவடைய வாய்ப்பில்லை. ஆனால், தற்போது உருவாகி உள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கையின் அருகே நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையானது அதே இடத்தில் நீடிக்கிறது. அது வலுவற்ற நிலையில்தான் தொடர்ந்து நீடிக்கிறது. இதன் காரணமாக தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், சென்னை உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களிலும் மழைக்கு வாய்ப்புள்ளது. வடமாவட்டங்களின் பிற பகுதிகளிலும், உள்மாவட்டங்களிலும் தொடர்ந்து வறண்ட வானிலையே நீடிக்கும். பனிப்பொழிவும் நிலவும்.

பருவமழை நிறைவு?: வடகிழக்கு பருவமழைக் காலம் பொதுவாக டிசம்பர் 31 -ஆம் தேதி நிறைவடையும். எனினும் இதுதொடர்பாக இந்திய வானிலை மையம் அறிவிப்பு வெளியிட்ட பின்பு, சென்னை வானிலை ஆய்வு மையம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர். செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, தமிழகத்தில் எங்கும் மழை பதிவாகவில்லை.

**கரும்பு டன்னுக்கு ரூ.2,850: தமிழக அரசு அறிவிப்பு**

நடப்பு கரும்பு பருவத்தில் கரும்புக்கான பரிந்துரை விலையை நிர்ணயம் செய்வதற்கு சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றோர்.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.2,850 கிடைக்கும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நடப்பு கரும்புப் பருவத்துக்கு நியாயமான-ஆதாய விலையாக டன்னுக்கு ரூ.2,300 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதாவது, கடந்த ஆண்டு நிர்ணயித்த அதே தொகையான ரூ.2,300 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

ஆனால், கர்நாடகத்தில் பெரும்பாலான ஆலைகள் டன்னுக்கு ரூ.2,600-ம், மகாராஷ்டிரத்தில் பெரும்பாலான ஆலைகள் டன்னுக்கு ரூ.2,475-ம் வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, கடந்த ஆண்டு நிர்ணயித்ததைப் போன்றே, தமிழக அரசு பரிந்துரை விலையாக, போக்குவரத்துச் செலவு ரூ.100 உள்பட ரூ.2,850 என விலை நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனால், மத்திய அரசு நிர்ணயித்த ஆதாய விலையான ரூ.2,300 என்பதற்குப் பதிலாக தமிழக கரும்பு விவசாயிகள் டன்னுக்கு ரூ.2,850 அதாவது கூடுதலாக ரூ.550 பெற வழிவகை ஏற்படும்.

கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தவும், சொட்டு நீர்ப் பாசன வசதிகளை கரும்பு விவசாயத்துக்கு அதிகளவில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குழு அமைப்பு: கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திடவும், சர்க்கரை ஆலைகளின் லாபத்தில் உரிய பங்கு பெறும் வகையிலும் கரும்பு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளிக்க விவசாயிகள்-சர்க்கரை ஆலை பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்படும் என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கூடுதலாக ரூ.550 பெறும் வகையில் கரும்பு விலை டன்னுக்கு ரூ.2,850 ஆக நிர்ணயம் ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு**



சென்னை,

கரும்புக்கான தமிழக அரசின் பரிந்துரை விலையாக ரூ.2 ஆயிரத்து 850 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

கரும்பு உற்பத்தி திட்டம்

கரும்பு உற்பத்தியைப் பெருக்கவும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அவர்களது வருமானம் அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகள் முழு அரவைத் திறனை அடைந்து அதன்மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையிலும் பல்வேறு திட்டங்களை மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தினார்.

விலை நிர்ணய கூட்டம்

தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளிலும் உயர் அளவில் கரும்புக்கான மாநில பரிந்துரை விலையை நிர்ணயம் செய்துள்ளது. அதேபோன்று கரும்புக்கான மாநில பரிந்துரை விலையை நிர்ணயம் செய்ய முடிவெடுத்துள்ளது.

நடப்பு கரும்பு பருவத்தில் கரும்புக்கான மாநில பரிந்துரை விலையை நிர்ணயம் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் எனது தலைமையில் 26-ந் தேதி (நேற்று முன்தினம்) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில், அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.சண்முகம், தொழில்துறை முதன்மைச் செயலாளர் விக்ரம் கபூர், வேளாண்மைத் துறைச்செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சர்க்கரை துறை ஆணையர் மகேசன் காசிராஜன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மத்திய அரசு நிர்ணயம்

நடப்பு 2016-17 கரும்பு பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 300 என்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதாவது, கடந்த ஆண்டு நிர்ணயித்த அதே தொகையை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

பக்கத்து மாநிலமான கர்நாடகத்தில் பெரும்பாலான ஆலைகள் டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 600 வழங்கி வருகின்றன. அதேபோன்று மராட்டிய மாநிலத்தில் பெரும்பாலான ஆலைகள் டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 475 வழங்கி வருகின்றன.

கூடுதலாக ரூ.550

கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, கடந்த ஆண்டு நிர்ணயித்ததைப் போலவே, மாநில அரசு பரிந்துரை விலையாக, போக்குவரத்து செலவு ரூ.100 உள்பட ரூ.2 ஆயிரத்து 850 என விலை நிர்ணயம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மத்திய அரசு நிர்ணயித்த ஆதாய விலையான ரூ.2 ஆயிரத்து 300 என்பதற்கு பதில் தமிழக கரும்பு விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 850, அதாவது கூடுதலாக ரூ.550 பெற வழிவகை ஏற்படும்.

குழு அமைக்க உத்தரவு

கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தவும், சொட்டு நீர்ப்பாசன வசதிகளை கரும்பு விவசாயத்திற்கு அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திடவும், சர்க்கரை ஆலைகளின் லாபத்தில் உரிய பங்குபெறும் வகையிலும் கரும்பு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளிக்க விவசாயிகள், சர்க்கரை ஆலை

பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்திடவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சங்கம் வரவேற்பு

மாநில அரசின் இந்த விலை நிர்ணயத்தை, தமிழ்நாடு புதுச்சேரி அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் வேட்டவலம் மணிகண்டன் வரவேற்றுள்ளார். ஏற்கனவே நிர்ணயித்த விலையை சர்க்கரை ஆலைகள் வழங்காமல் பாக்கி வைத்திருப்பதால், அந்தத் தொகையையும் சேர்த்து கரும்பு விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சின்னாளபட்டி பகுதிகளில் பூத்துக்குலுங்கும் செவ்வந்தி பூக்கள் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை

சின்னாளபட்டி, சின்னாளபட்டி பகுதிகளில் செவ்வந்தி பூக்கள் பூத்து குலுங்குகின்றன. போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பூக்கள் சாகுபடி

பூக்கள் உற்பத்தியில் 'ஹாலந்து' என்றழைக்கப்படும் திண்டுக்கல் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பூ சாகுபடி செய்கின்றனர். குறிப்பாக செவ்வந்தி பூ சாகுபடி செய்வது கடந்த காலங்களில் அதிகளவு இருந்தது. கார்த்திகை மாதம் தொடங்கும் செவ்வந்திபூக்கள் அறுவடை பணிகள் பொங்கல் வரை நீடிக்கும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிலோ செவ்வந்திபூக்கள் அதிகபட்சமாக ரூ.120 வரை விற்பனை ஆனது.

இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்தது. இதையடுத்து செவ்வந்தி பூக்கள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டத்தொடங்கினர். இந்தநிலையில் தற்போது சின்னாளபட்டி, காந்திகிராமம் அண்ணாநகர், அம்மையநாயக்கனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள செவ்வந்தி பூக்கள் சாகுடி செய்யப்பட்டுள்ளது. இந்த தோட்டங்களில் பூக்கள் இது குறித்து சாமியார்பட்டியை சேர்ந்த பூ விவசாயி ஒருவர் கூறுகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஒரு விவசாய தோட்டத்தில் குறைந்தது 2 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை செவ்வந்தி பூக்கள் சாகுபடியில் தான் விவசாயிகள் ஈடுபட்டனர். கார்த்திகை மாதம் அய்யப்ப பக்தர்கள் இந்த பூக்களை வாங்கிச்செல்வார்கள். அதன் பின்னர் தொடர்ந்து பண்டிகை காலம் என்பதால் செவ்வந்தி பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

வண்ண செவ்வந்தி

பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் செவ்வந்தி பூக்களை திண்டுக்கல், நிலக்கோட்டை பூ மார்க்கெட்டுகளில் நேரடியாக கொண்டு சென்று விற்பனை

செய்கிறோம். மேலும் ரெயில், லாரிகள் மூலம் சென்னை, தென்காசி, கும்பகோணம், புதுச்சேரி, பெங்களூரு போன்ற பகுதிகளுக்கு அதிகளவு அனுப்பி விற்பனை செய்தோம்.

ஆனால் கடந்த 8 ஆண்டுகளாக பெங்களூரு, தர்மபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் பல்வேறு வண்ண செவ்வந்தி பூக்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பூக்கள் பார்க்க அழகாக தெரிவதால் பொதுமக்கள் விரும்பி வாங்குகின்றனர். இந்த பூக்கள் திண்டுக்கல் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>விளைச்சல் குறைவு</u>

இதன்காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் செவ்வந்தி பூக்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இதனால் எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் பருவமழையும் கடந்த சில ஆண்டுகளாக முறையாக பெய்யவில்லை. இதனால் ஆழ்துளை கிணறுகள் மூலம் கிடைக்கும் தண்ணீரை கொண்டு தான் பூக்கள் சாகுபடியில் ஈடுபட்டு வருகிறோம்.

போதிய அளவு தண்ணீர் கிடைக்காததால் தற்போது பூக்கள் விளைச்சலும் குறைந்துள்ளது. இதையடுத்து கூடுதல் விலை கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் ரூ.120 வரை விற்பனையான ஒரு கிலோ செவ்வந்தி பூக்கள் தற்போது ரூ.20 முதல் ரூ.30 வரையே மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் உற்பத்தி செலவை கூட எங்களால் ஈடுசெய்ய முடியவில்லை’ என்றார்.

## வேடசந்தூர் பகுதிகளில், போதிய மழை பெய்யாததால் கருகி வரும் மானாவாரி பயிர்கள்



வேடசந்தூர்,
வேடசந்தூர் பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>மானாவாரி பயிர்கள்</u>

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், மாரம்பாடி, நாகையகோட்டை, அய்யாக்கவுண்டன்புதூர், எரியோடு, கல்வார்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம், நிலக்கடலை உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.
ஆனால் இந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றது. எனினும் மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் கல்வார்பட்டி, அழகாபுரி, அய்யாக்கவுண்டன்புதூர் பகுதிகளில் விவசாயிகள் நிலக்கடலை, பருத்தி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.

<u>நிவாரணம் வழங்க நடவடிக்கை</u>

ஆனால் எதிர்பார்த்த படி மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. நிலக்கடலை, பருத்தி செடிகள் கருகி நிற்பதை பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இதனால் விவசாயத்தை நம்பியிருந்த விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் மாற்றுத் தொழிலை தேடி ஊரை காலி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, 'வேடசந்தூர் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன. மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் கடன் வாங்கி பயிர்களை சாகுபடி செய்தோம். ஆனால் பயிர்கள் கருகி வருவது வேதனையாக இருக்கிறது. இதனால் விவசாயத்தை கைவிட்டு மாற்றுத்தொழிலை தேடி செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## கரூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது வேளாண்மை இணை இயக்குனர் தகவல்




கரூர்,

கரூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது என்று வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப் கூறினார்.

அறிக்கை

கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 3,540 எக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. சிறு தானிய பயிர்கள் 8,174 எக்டேரும், பயறு வகைகள் 4,023 எக்டேரும், எண்ணெய் வித்து பயிர்கள் 3,283 எக்டேரும், கரும்பு 340 எக்டேரும், கரும்பு மறுதாம்பு 1,736 எக்டேரும் பயிரிடப்பட்டுள்ளது. 10 ஆயிரத்து 76 எக்டேரில் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாத காரணத்தால் ஏற்படும் வறட்சியை தவிர்க்க பிங்க் பிக்மெண்டேடு, மெத்தைலோட்ரோபிக் பாக்டீரியா என்ற திரவ நுண்ணுயிரியை ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் அளவில் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் இலைகள் நன்கு நனையும் படி தெளிக்கவும். பயிர்களின் முக்கிய வளர்ச்சி காலங்களில் 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிப்பதன் மூலம் பயிர் வறட்சியை தாங்குகிறது.

மானியம்

இதைத்தொடர்ந்து பொட்டாசியம் குளோரைடு, 1 சதவீதம் கரைசலை பயிர்களின் முக்கிய பருவத்தில் தெளிப்பதன் மூலம் பயிர்கள் வறட்சியை தாங்கும். மேலும் கரும்பு மற்றும் சோளத்தின் சோகையை நிலப்போர்வையாக பயன்படுத்துவதன் மூலம் நிலத்தின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள், பழச்செடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று மா, கொய்யா, காய்கறிகள், மலர்கள், வாசனை பயிர்கள், வீட்டு காய்கறி தோட்டம் ஆகியவை 50 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## 2 ஆண்டுகளுக்கு பிறகு மேட்டூர் அணையின் நீர்இருப்பு 10 டி.எம்.சி. ஆக குறைந்தது



மேட்டூர்,

மேட்டூர் அணையின் நீர் இருப்பு கடந்த 2 ஆண்டுகளுக்கு பிறகு 10 டி.எம்.சி. ஆக குறைந்து உள்ளது.

## தண்ணீர் திறப்பு

இந்த ஆண்டு பருவமழை கைகொடுக்காத நிலையில் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்காக கடந்த செப்டம்பர் மாதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பருவமழை கைகொடுக்காவிட்டாலும் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி கர்நாடகம், தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய தண்ணீரை முழுமையாக அளிக்கும் என்ற எதிர்பார்ப்பும் வீணானது.

இதனால் அணைக்கு போதுமான நீர்வரத்து இல்லாத நிலையிலும் அணையில் இருந்து இன்று வரை டெல்டா பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதன் எதிரொலியாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்து கொண்டே வருகிறது.

## 10 டி.எம்.சி. ஆக குறைந்தது

குறிப்பாக கடந்த நவம்பர் மாதம் அணையின் நீர்மட்டம் 40 அடிக்குகீழ் குறைந்ததால் அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 750 கனஅடியாக குறைக்கப்பட்டது. அதேசமயம் அணைக்கு நீர்வரத்தும் மிகவும் குறைந்து விட்டது.

இதன் காரணமாக மேட்டூர் அணையில் உள்ள நீர்இருப்பை பயன்படுத்தி அடுத்த பருவமழை காலமான ஜூன் மாதம் வரை குடிநீர் தேவையை சமாளிக்க முடியுமா? என்ற அச்சம் நிலவி வருகிறது. அதாவது, நேற்றைய நிலவரப்படி அணையின் நீர் இருப்பு 10.89 டி.எம்.சி.யாக குறைந்து விட்டது. இதே நிலை கடந்த 2014–ம் ஆண்டு மே மாதத்தில் நிலவியது. அதன்பிறகு 2 ஆண்டுகளுக்கு பிறகு தற்போதுதான் மேட்டூர் அணையின் நீர்இருப்பு 10 டி.எம்.சி.யாக குறைந்து உள்ளது.

## நீர்மட்டம் 37.62 அடி

ஆகவே, பருவமழை கைகொடுத்தால் மட்டுமே பாசன தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் குடிநீர் தேவையையாவது சமாளிக்க முடியும். இதனால் கவலையடைந்து உள்ள விவசாயிகளும், பொதுமக்களும் வருணபகவானை வேண்டி வருகின்றனர்.

நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 37.62 அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 750 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அணைக்கு வினாடிக்கு 148 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மொச்சை கிலோ 40 ரூபாய்**

ஆர்.கே.பேட்டை : பச்சை மொச்சை விளைச்சல் குறைந்தாலும், கடந்த ஆண்டை போலவே, ஒரு கிலோ 40 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விற்கப்படுகிறது. கார்த்திகை, மார்கழி மாதத்தில் மட்டுமே கிடைக்கக்கூடிய பச்சை மொச்சைக்காய்க்கு பலத்த வரவேற்பு உள்ளது. பொங்கலுக்கு பின், இவற்றின் விளைச்சல் படிப்படியாக குறைய துவங்கும். மாசியில், செடிகள் களையப்பட்டு விடும். சந்தைக்கு கொண்டு வரப்படும் மொச்சைக்காய்கள் ஒரு சில நிமிடங்களில் விற்று தீர்ந்து விடும்.

மானாவாரியாக பயிரிடப்பட்டு, அதிக சந்தை வாய்ப்புள்ள மொச்சையை பயிரிட விவசாயிகளும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நேரடி விற்பனைக்காக வரும் விவசாயிகள், பெரும்பாலும், கிலோ அளவில் தான், மொச்சை எடை போட்டு விற்கப்படுகிறது. தற்போது ஒரு கிலோ மொச்சை 40 ரூபாய் என, விற்கப்பட்டு வருகிறது.

மழைப்பொழிவு இல்லாததால், மொச்சை விளைச்சல், கடந்தாண்டை விட குறைவாகவே உள்ளது. ஆனாலும், கடந்தாண்டு விலையில் மாற்றம் ஏதும் இல்லை. இதனால், பகுதிவாசிகள் மொச்சையை வாங்கி ருசித்து வருகின்றனர்.

**தமிழக மீனவர்களின் பழைய மீன்பிடி படகுகளுக்கு ஆந்திராவில் 'கிராக்கி'**

சதுரங்கப்பட்டினம்: ஆந்திர மீனவர்கள், தமிழகத்தில் பயன்படுத்திய பழைய மீன்பிடி படகுகளை, ஆர்வமாக விலைக்கு வாங்குகின்றனர். ஆந்திரம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில், கடலில் மட்டுமின்றி, ஆறுகளிலும், மீன்பிடி தொழில் நடக்கிறது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அப்பகுதி மீனவர்களுக்கு, விசைப்படகுகள், தொழிலின் முக்கிய தேவையாக உள்ளது. அப்பகுதியில், படகு தயாரிப்பிற்கான பொருட்கள் எளிதாக கிடைக்காமல், தமிழகத்திலிருந்தே கொண்டு செல்லப்படுவதால், படகுகள் தயாரிப்பு குறைவு.

படகுகளின் விலையும் அதிகம் என்பதால், ஏழை, நடுத்தர மீனவர்களால், புதிதாக வாங்க இயலவில்லை. இந்நிலையில், தமிழகத்தில், பயன்பாட்டிற்கு பின், தொழிலிலிருந்து கழிக்கப்படும் பழைய படகுகளை, ஆந்திர மீனவர்கள் விரும்பி வாங்குகின்றனர். இத்தொழிலிலும், படகிற்கு தேவையான பொருட்கள் கிடைப்பதிலும், தமிழகம் சிறந்து விளங்குவதால், நல்ல நிலையில் உள்ள பழைய படகுகளை வாங்க, இங்கு வருகின்றனர்.

ஆந்திர ஆறுகளில், மீன் பிடிப்பவர்கள், இங்குள்ள மீனவர்கள் பயன்படுத்திய பழைய படகுகளை, குறைவான விலைக்கு வாங்கி, அங்கு பயன்படுத்துகின்றனர். பழைய படகின் விலை, அதை கொண்டு செல்லும் போக்குவரத்து செலவு, பழுது பார்ப்பு செலவு ஆகிய மொத்த செலவை விட, அப்பகுதி புதிய படகின் விலை மிகவும் அதிகம்; அதனால்தான், தமிழக மீனவர்கள் பயன்படுத்திய பழைய படகுகளை விரும்பி வாங்குகின்றனர்.

**கள்ளக்குறிச்சியில் பருத்தி வார சந்தை ரூ.25 லட்சத்திற்கு பஞ்சு கொள்முதல்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி வார சந்தையில், 25 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், இந்தாண்டு பருத்தி வார சந்தை, கடந்த 14ம் தேதி துவங்கியது. இதனையடுத்து, மூன்றாவது வாரமாக நேற்று நடந்த வார சந்தையில், அடரி, கைகளத்துார், பொரசக்குறிச்சி, விருகாவூர், பெரம்பலுார் உள்ளிட்ட பல்வேறு

பகுதிகளைச் சேர்ந்த 64 விவசாயிகள் 1,289 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

மகுடஞ்சாவடி, தேனி, சத்தியமங்கலம், திருப்பூர், புஞ்சை, ஆத்தூர், கொங்கனாபுரம், புளியம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர். ஒரு குவிண்டால் எல்.ஆர்.ஏ., பஞ்சு அதிகபட்சம் ரூ.5,451க்கும், குறைந்தபட்சம் ரூ.5,196க்கும் விலை போனது. ஸ்வின் ரக பஞ்சு அதிகபட்சம் ரூ.6,400க்கும், குறைந்தபட்சம் ரூ.5,950க்கும் விலை போனது. மொத்தம் 1289 பஞ்சு மூட்டைகள் 25 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

**காய்கறி விலையில் முன்னேற்றம் இல்லை அறுவடை பணியிலும் தொடர் தொய்வு**

மஞ்சூர் : மலை காய்கறி விலையில் முன்னேற்றம் இல்லாததால், அறுவடை செய்யும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான இத்தலார், போர்த்திஹாடா, எமரால்டு, எம்.பாலாடா, மணிஹட்டி, பாலகொலா, மணலாடா, நுந்தளா உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் கேரட், பீட்ரூட், உருளை கிழங்கு, முட்டைகோஸ், பீன்ஸ் உள்ளிட்ட மலை காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் போதிய மழை இல்லாமல் இருந்தாலும், விவசாயிகள் ஆற்று நீரை பயன்படுத்தி விளை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி விவசாயம் மேற்கொண்டனர்.

விலையில்லாததால் அவதி:

மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும், மலை காய்கறிகள் ஊட்டி, குன்னூர் உள்ளிட்ட உள்ளூர் சந்தையை தவிர, மேட்டுப்பாளையம் சந்தைக்கு எடுத்து செல்லப்பட்டு விற்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் ஓரளவுக்கு ஆறுதலாக இருந்து வந்த நிலையில், கடந்த இரண்டு வாரங்களாக விலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதனால், விளை

நிலத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள மலை காய்கறிகளை சந்தைக்கு எடுத்து சென்று விற்க விலை கட்டுப்படியாகாத காரணத்தினால், அறுவடைக்கு தயாரான மலை காய்கறிகள் அறுவடை செய்ய முடியாமல் உள்ளது. கூக்கல் தொரை உட்பட சில இடங்களில் மட்டும், குறைந்தளவிலான உருளை கிழங்கு அறுவடை செய்யப்படுகிறது. இதே நிலை நீடிக்கும் பட்சத்தில் மலை காய்கறி தோட்டத்தில் அழுகும் சூழ்நிலை ஏற்பட்டதால், விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயி ராமன் கூறுகையில், "அறுவடைக்கு தயாராக உள்ள மலை காய்கறிகளுக்கு விலை இல்லாததால், அறுவடை செய்யப்படாமல் உள்ளன. விலையை எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காதபட்சத்தில், அறுவடைக்கு தயாரான மலை காய்கறிகள் தோட்டத்தில் அழுகி நஷ்டம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் மட்டும் அறுவடை செய்யப்படுகிறது," என்றார்.

## வீரசோழபுரத்தில் விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு பயிற்சி

அரியலூர்: வீர சோழபுரத்தில் விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ்(அட்மா) பண்ணைகுட்டைகளில் மீன் பற்றிய மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வீரசோழபுரம் கிராமத்தில் நடைபெற்றது.பயிற்சிக்கு ஊராட்சி மன்றதலைவர் பிரகாசம் தலைமை வகித்தார். மீன்வளத்துறை ஆய்வாளர் ஞானம் முன்னிலை வகித்து பேசினார். விவசாயிகள் அருகில் அமைக்கப்பட்டுள்ள மீன் வளர்க்கும் பண்ணைக்குட்டைக்கு அழைத்து செல்லப்பட்டு மீன் வளர்ப்பு முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. இதில் 40 விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் பயனடைந்தனர்.வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

**பயிர் காப்பீடு ஆலோசனைக்கூட்டம்**

போடி, போடியில் பிரதமர் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகள் சேருவது குறித்து ஆலோசனை கூட்டம் நடந் தது. மாவட்டத்தில் பருவ மழை இல்லாததால் பயிர்கள் விளைச்சல் இல்லாமல் கடுமையாக பாதிக்கப்பட்டு, பல்வேறு இடங்களில் கருகி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சிரமங்களை போக்கவும், நிவாரணம் பெறவும் மத்திய அரசு பிரதமரின் பயிர்காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அத் திட்டத்தில் சேருவது குறித்து விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டம் போடி தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் முருகேசன் தலைமையில் நடந்தது. மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம், வேளாண்மை உதவி அலுவலர்கள், வருவாய் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் சேர்வதற்கான பட்டா, சிட்ட, அடங்கல் உள்ளிட்ட சான்றுகளை வி.ஏ.ஓ., க்கள் தாமதமின்றி வழங்க வேண்டும். வேளாண்மை உதவி அலுவலர்கள் தேவையான உதவிகளை செய்திட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தினகரன்

## அரியலூரில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர்:அரியலூரில் 30ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது.இது குறித்து அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் வரும் 30ம் தேதி காலை 10 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. இதில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்கடன் உதவிகள்,இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் முறையீடுகள் குறித்து அனைத்து துறை சார்ந்த் அலுவலர்களுடன் விவாதிக்கப்படும். எனவே அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூவத்தூரில் நிலக்கடலை பயிர் மேலாண்மை பண்ணை பயிற்சி

ஜெயங்கொண்டம்: ஆண்டிமடம் வட்டாரம் கூவத்தூர் கிராமத்தில் வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பண்ணைப்பள்ளி நடைபெற்றது. பயிற் சிக்குவேளா ண்மை உதவிஇயக்குநர்(பொ) சுகந்தி பண்ணைப்பள்ளி நோக்கம் குறித்து பேசினார். பண்ணைப்பள்ளியில் கிரீடு வேளாண்மை அறிவியல் மையதொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா நிலக்கடலையில் விதைநேர்த்தி செய்வதன் பயன்கள் குறித்து பேசினார்.கிரீடு வேளாண்மை அறிவியல் மையதிட்ட ஒருங் கிணைப்பாளர் அழகுகண்ணன், பண்ணை மேலாளர் திருமலைவாசன் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர். தொழில்நுட்ப மேலாளர் விஜயகுமார் நன்றி கூறினார்.

## தரங்கம்பாடியில் 10,000 ஏக்கர் சம்பா பயிர் கருகியது வயலில் பாளம் பாளமாக வெடிப்பு

தரங்கம்பாடி: நாகை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகாவில சம்பா சாகுபடி செய்யபட்ட 10 ஆயிரம் சம்பா பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து கருகிறது. வயல் பாளம் பாளமாக வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். தரங்கம்பாடி தாலுகாவில் பொறையார், காட்டுச்சேரி, தில்லையாடி, உள்ளிட்ட பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்திருந்தனர். அவற்றில் 5 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யபட்ட சம்பா பயிர்கள் பம்புசெட் மூலம் தண்ணீர் விடப்பட்டு பயிர்கள் வளர்ந்துள்ளன. ஆனால் காவிரி நீர் மற்றும் மழையை நம்பி பயிரிடப்பட்ட 10 ஆயிரம் ஏக்கர் சம்பா சாகுபடி பயிர்கள், கருகியது. வயல்கள் முழுவதும் பாளம் பாளமாக வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் வேதனையடைந்த விவசாயிகள், கருகிய பயிரில் கால்நடைகளை மேய்யவிட்டுள்ளனர்.

இது குறித்து டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் குருகோபிகணேசன் கூறியதாவது: தரங்கம்பாடி தாலுகாவில் வழக்கமாக 15 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பகுதிகளில் சம்பா சாகுபடி பயிர் செய்யபடும். கடைமடை பகுதியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யபடும் சம்பா பயிர்கள் காவிரிநீர் மற்றும் மழையை நம்பியே இருக்கும். வழக்கதிற்கு மாறாக இந்த ஆண்டு காவிரியிலும் தண்ணீர் வராமல், மழையும் பெய்யாமல் விவசாயிகள் கடுமையான கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். நடவு செய்த இந்த பயிர்கள் வளர்ந்து வராமல் கருகி காய்ந்து போவதை கண்டு விவசாயிகள் உயிரை மாய்த்து கொள்ளும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகளை காப்பாற்ற அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## வத்தலக்குண்டுவில் விரைவில் தேங்காய் கொள்முதல் மையம் தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி தகவல்

வத்தலக்குண்டு: வத்தலக்குண்டுவில் தேங்காய் கொள்முதல் மையம் விரைவில் துவங்கப்படும் என தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி தெரிவித்துள்ளது. இந்திய

தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் திண்டுக்கல் தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி ஆகியவை இணைநது தென்னை மரம் ஏறும் 6 நாள் பயிற்சி முகாம் வத்தலக்குண்டுவில் நடத்தியது. இதில் பயிற்சி பெற்றவர்களுக்கு தென்னை மரம் ஏறும் மிஷின் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிலக்கோட்டை டிஎஸ்பி சுருளியாண்டி தலைமை வகித்தார். தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி சேர்மன் முன்னாள் டிஎஸ்பி முருகேசன் முன்னிலை வகித்து பேசுகையில், ''தென்னை உற்பத்தியாளர் கம்பெனி மூலம் தென்னை விவசாயிகளுக்கு இந்திய தென்னை வளர்ச்சி வாரியத்திடம் இருந்து இலவசமாக உரம் வாங்கி வழங்கி வருகிறோம். அடுத்த கட்டமாக தென்னை உற்பத்தியாளர் கம்பெனி சார்பாக வத்தலக்குண்டுவில் தேங்காய் கொள்முதல் மையம் விரைவில் தொடங்க இருக்கிறோம். தென்னை விவசாயிகள் தங்களது தேங்காய்களை அங்கு நல்ல விலைக்கு விற்கலாம்'' என்றார். நிகழ்ச்சியில் பயிற்சி பெற்ற 40 பேருக்கு சான்றிதழும், காப்பீடு பத்திரமும் தென்னை மரம் ஏறும் கருவியும் வழங்கப்பட்டது. இதில் இயக்குனர்கள் சீனிவாசன், முகமதுஅலி, தேன்நிலா, லிங்கையா, ஜெகதீசன், காசி உள்பட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் தேனிலா நன்றி கூறினார்.

## கரூர் மாவட்டத்தில் நாளை முதல் இலவச செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம்

கரூர் : தமிழக அரசு பயனாளிகளுக்கு வழங்கிய இலவச செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நாளை, நாளை மறுநாள் ஆகிய 2 நாட்கள் நடைபெறுகிறது. கரூர் கலெக்டர் கோவிந்தராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: கடந்த 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்ட இலவச வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிக்கு 4 ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 7 லட்சம் பயனாளிகளுக்கு 28 லட்சம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் மூலம் இலவச வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளன.

பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. இலவச செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளின் எடையினை அதிகரிக்கவும், கரூர் மாவட்டம் முழுவதும் டிசம்பர் 29ம்தேதி மற்றும் 30ம்தேதி ஆகிய நாட்களில் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் முகாமில் கலந்து கொண்டு தங்களின் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை பெற்று பயன்பெறலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறிகள், பழங்கள் பதப்படுத்துதல் பயிற்சி

நாகை: சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறிகள், பழங்கள் பதப்படுத்துதல் பற்றிய பயிற்சி முகாம் நடந்தது. நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஜெய் கிசான் ஜெய் விக்யான் மற்றும் தொழில்நுட்ப வார விழாவை முன்னிட்டு, 2வது நாளாக காய்கறிகள், பழங்கள் பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தோட்டக்கலை உதவி பேராசிரியர் தமிழ்ச்செல்வன் பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். மனையியல் உதவி பேராசிரியர் செல்வி கலந்து கொண்டு காய்கள், பழங்கள் பதப்படுத்துதலின் முக்கியத்துவம், பதப்படுத்தும் முறைகள், மதிப்பு கூட்டுதல் குறித்து விளக்கி பேசினார். நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் கணேசன், தொழில் முனைவோர் உருவாக்கம், சந்தைப்படுத்துதல் முக்கியத்துவம் குறித்து பேசினார். பயிற்சியில், வனவியல் உதவி பேராசிரியர் ரவி, பூச்சியியல் உதவி பேராசிரியர் அழகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப அலுவலர் ஞானபாரதி செய்திருந்தார்.

## சம்பா சாகுபடியில் களை மண்டுவதை கட்டுப்படுத்த வேளாண் ஆலோசனை தேவை விவசாயிகள் எதிர்பார்ப்பு

வேதாரண்யம்:சம்பா சாகுபடி பயிரில் களை மண்டுவதை தடுக்க வேளாண்துறை ஆலோசனை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.வேதாரண்யம் தாலுக்காவில் தலைஞாயிறு, கரியாப்பட்டினம், வாய்மேடு, மருதூர், ஆயக்காரன்புலம், கத்தரிப்புலம், செம்போடை, தாணிக்கோட்டகம் உள்ளிட்ட ஆற்றுப்பாசன மற்றும் மானாவாரி பகுதியில் 24 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி நேரடி நெல் விதைப்பாக செய்தனர். ஆற்றுப்பாசன பகுதிகளில் காவேரி நீர் வராததாலும் மானாவாரி பகுதிகளில் போதிய பருவ மழை பெய்யாததாலும் சம்பா சாகுபடிகள் கருகத் தொடங்கின.
பல இடங்களில் தங்கள் சாகுபடி செய்த வயல்களில் ஆடு, மாடுகளை மேய்க்க துவங்கி உள்ளனர். இந்நிலையில் ஒருசில இடங்களில் ஓரளவு வளர்ந்துள்ள பயிர்களில் அதிகப்படியான களை மண்டிக்கிடக்கின்றன. வரிகீரை, வரகுபுல், அமளை கோரை போன்ற களை, பயிரை விட அதிகமாக மண்டிக் கிடக்கின்றன. வழக்கமாக மழை பெய்து சாகுபடி நன்றாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு களை எடுப்பதற்கு 15 முதல் 18 நாட்கள் ஆகும். ஆனால் தற்போது மண்டிக்கிடக்கும் களையை எடுப்பதற்கு ஏக்கருக்கு 60 முதல் 75 நாட்கள் ஆகிறது. இதனால் ஒருசில இடங்களில் சிறிது களையை எடுத்துவிட்டு மேலும் களை எடுக்க பணம் இல்லாமல் வயலை அப்படியே விட்டுவிட்டனர். ஓரளவு வளர்ந்த பயிரை காப்பாற்றுவதற்கு போராடும் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையினர் தகுந்த ஆலோசனை வழங்கி களைகளை

கட்டுப்பபடுத்தும் முறையையும், இருக்கும் பயிரை காப்பாற்றுவதற்கும் தகுந்த ஆலோசனை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சென்னியவிடுதியில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டாரம் சென்னியவிடுதியில் அட்மா- விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் 40 விவசாயிகளுக்கு நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை சிறப்பு பயிற்சி வகுப்பு நடந்தது. திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தலைமை வகித்தார். முன்னாள் ஊராட்சி தலைவர் சூரியமூர்த்தி முன்னிலை வகித்தார். திருவோணம் வட்டார அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் மேனகா வரவேற்றார். திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் பேசுகையில், நெற்பயிர் வளர்ச்சி குன்றி மஞ்சள் நிறமாக காணப்பட்டால் அது துத்தநாக பற்றாகுறையின் அறிகுறியாகும். இதை நிவர்த்தி செய்ய 2 கிலோ யூரியாவுடன் ஒரு கிலோ சிங்க் சல்பேட் நுண்ணுரத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் மாலை வேளையில் கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

தற்போது பரவலாக காணப்படும் பாக்டீரியா இலை கருகல் மற்றும் பாக்டீரியா கீறல் நோயை கட்டுப்பபடுத்த 20 சத பசுஞ்சாணக்கரைசல் தெளிக்க வேண்டும். இதற்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து முதல்நாள் முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறுநாள் தெளிந்த கரைசலை வடிகட்டி எடுத்து அத்துடன் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து கரைசலை ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். நெற்பயிர் சூல்பிடிக்கும் பருவம் மற்றும் கண்ணாடி இலை பருவத்தில் இருக்கும்போது 2 சத டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும்.

இதற்கு 4 கிலோ டிஏபி உரத்தை நன்கு தூள் செய்து 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் நன்கு ஊற வைக்க வேண்டும். மறுநாள் தெளிந்த டிஏபி கரைசலை மட்டும் வடிகட்டி அத்துடன் 2 கிலோ யூரியா மற்றும் 2 கிலோ பொட்டாஷ் உரம் சேர்த்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என்றார். திருவோணம் உதவி விதை அலுவலர் முருகையன், வட்டார அட்மா தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி வேளாண்மை அலுவலர் சரவணன், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நெடுஞ்செழியன், ரத்தினம் பங்கேற்றனர்.

## தென்னை விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்

பேராவூரணி: பேராவூரணி அருகே உள்ள திருச்சிற்றம்பலத்தில் தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவன கலந்தாய்வு கூட்டம் நடந்தது. வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இணை இயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்தார். மாவட்ட துணை இயக்குநர் உதயகுமார், இந்திய பாரம்பரிய அறிவியல் மைய அலுவலர் சுபாசினி ஸ்ரீதர், உதவி அலுவலர் சிவசாமி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில்

தென்னை விவசாயத்தை மேம்படுத்துவது, உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களை கூடுதல் விலைக்கு விற்பது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. கூட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குனர்கள், சீனிவாசன், துரைசெல்வம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## உளுந்து சாகுபடியில் தொழில்நுட்பம் கடைபிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம்

சேதுபாவாசத்திரம்: உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற சாகுடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தயாளன் வெளியிட்டுள்ள அறிக்கை:ஜனவரி மற்றும் கோடைப்பருவமான பிப்ரவரி, மார்ச் மாதங்கள் உளுந்து பயிர் சாகுபடிக்கு ஏற்ற தருணமாகும். இதற்கு ஏற்ற ரகம் ஆடுதுறை 5, வம்பன் 5, 6, ஐடியூ 941, ஆகியவையாகும். விதைப்பு செய்தவற்கு முன்பாக விதை மூலம் பரவக்கூடிய வேரழுகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு ஒரு கிலோ விதைக்கு டிரைகோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூசானம் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

பின்னர் பயறு வகை பயிர்களுக்குரிய ரைசோபியம் 200 கிராம், அசோஸ்பைரில்லம் 200 கிராமை 160 மில்லி ஆறிய அரிசி கஞ்சியுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் கலந்து ஒரு நாள் முழுவதும் நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் உயிர் உர நேர்த்தி செய்த விதைகளை 24 மணி நேரத்துக்கு பின் விதைப்பு செய்ய வேண்டும். இவ்வாறு விதைப்பு செய்யும்போது காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமித்து வைத்து பயிர் வளர்ச்சிக்கு உதவுவதால் தழைச்சத்து இடுவதை குறைத்து கொள்ளலாம். இதனால் சாகுபடி செலவு குறைகிறது.

தரிசு நிலத்தில் விதைப்பு செய்ய ஏக்கருக்கு 8 கிலோ விதை, நஞ்சை தரிசில் விதைப்பு செய்ய ஒரு ஏக்கருக்கு 10 கிலோ விதை போதுமானது. இதை அறுவடை செய்வதற்கு 8 லிருந்து 10 நாட்களுக்கு முன்பாக விதை நேர்த்தி செய்து விதைகளை தூவ வேண்டும். அப்போதுதான் அனைத்து விதைகளும் முளைக்கும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடிக்கும்போது ஹெக்டேருக்கு 630 கிலோ வரை மகசூல் பெறலாம்.

பயறுவகை பயிர்களில் உற்பத்தி, சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதற்காக தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மானிய விலையில் சான்று பெற்ற உளுந்து விதை விநியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான வம்பன் 5, 6, ஆடுதுறை 5, ஐ.டி.யு 941 ஆகிய உளுந்து விதைகள் போதுமான அளவு வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் கையிருப்பில் உள்ளது. தேவைப்படும் விவசாயிகள், மானிய விலையில் விதைகளை பெற்று பயன்பெறலாம்.

## உளுந்து பயறுவகைகளில் பயிர் மேலாண்மை பயிற்சி

திருவையாறு : திருவையாறு வட்டாரம் வேளாண்மைத்துறை அட்மா சீப்பர்ஸ் திட்டத்தின்கீழ் 2016 -2017ம் ஆண்டுக்கான உளுந்து பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் திருவையாறு மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார். பருவம் விதைநேர்த்தி மற்றும் இலைவழி உணவு ஊட்டம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்து ஓய்வுபெற்ற வேளாண்மை இணை இயக்குநர் கலியமூர்த்தி, உளுந்து பயிரில் உள்ள தொழில்நுட்பம், பயிர் பாதுகாப்பு, தரமான விதை உற்பத்தி குறித்து உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகரன் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். ஏற்பாடுகளை உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் வெங்கடேசன், வேளாண் உதவி அலுவலர்கள் இளந்திரையன், பாலமுருகன் செய்திருந்தனர். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மாதாலட்சுமி நன்றி கூறினார்.

## தண்ணீரின்றி வாடும் மிளகாய் செடிகளை காப்பாற்ற விவசாயிகள் தீவிர முயற்சி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் கருகி வரும் மிளகாய் செடிகளை காப்பாற்ற பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி விவசாயிகள் பாய்ச்சி வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சோழந்தூர், சேத்திடல், செங்குடி, புல்லமடை, இரட்டையூரணி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் தற்போது மிளகாய் செடிகள் நட்டுள்ளனர். போதிய மழை இல்லாததால் நெற்பயிர்களை அழித்து விட்டு மிளகாய் செடிகள் நட்டனர். ஆனால் மிளகாய் செடிகளையும் காப்பாற்ற தண்ணீர் இல்லாததால் அவை கருகி வருகிறது.


இதற்காக விவசாயிகள் பல கிலோ மீட்டர் தூரத்திலிருந்து தண்ணீரை பணம் கொடுத்து வாங்கி பாய்ச்சும் அவல நிலையில் உள்ளனர். இதுகுறித்து விவசாயி மகாலிங்கம் கூறியது, இரண்டு முறை நெல் விதைத்தும் பலன் இல்லை. போதிய மழை இல்லாததால் அதை அழித்து விட்டு மிளகாய் செடிகளை நட்டோம். அதற்கும் தண்ணீர் இல்லாததால் விலை கொடுத்து வாங்கி பாய்ச்சுகின்றோம். ஏக்கருக்கு 10 ஆயிரம் ருபாய் வரையிலும் தண்ணீருக்காக செலவு செய்கிறோம் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழகத்தில் 3 நாட்களுக்கு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தென் தமிழகத்தில் 3 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம், "தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டி தெற்கு இலங்கை பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உள்ளது. இதன்காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும். வடதமிழகம் மற்றும் உள்தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும்.



சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்" என்று தெரிவித்துள்ளது.

**மழை பொய்த்து வெயில் அடிப்பதால் முன்னதாகவே தொடங்கியது உப்பு உற்பத்தி**



தூத்துக்குடியில் உள்ள உப்பளத்தில் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளி. | படம்: என்.ராஜேஷ்

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை யின்றி வெயில் அடித்து வருவதால் உப்பு உற்பத்தி முன்கூட்டியே தொடங்கியுள்ளது.
தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையா புரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் அமைந்துள்ளன. இவற்றில் 30 ஆயிரம் தொழி லாளர்கள் வேலை செய்கின்றனர்.

**25 லட்சம் டன் உற்பத்தி**

ஆண்டுக்கு சராசரியாக 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய் யப்படுகிறது. நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத் மாநிலத் துக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி உள்ளது. மழை மற்றும் பனிக் காலம் முடிந்த பின், பிப்ரவரி மாதம்தான் உப்பு உற்பத்திக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் இங்கு தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம் பர் வரையான 6 மாதங்களில் உப்பு உற்பத்தி உச்சகட்டத்தை எட்டும். அக்டோபர் மத்தியில் வடகிழக்கு பருவமழை தொடங்கும் போது உப்பு சீஸன் முடிவடையும். அதையடுத்த 6 மாதங்கள் உப்பு உற்பத்தி இருக்காது.

**முன்னதாகவே தொடக்கம்**

நடப்பாண்டு வடகிழக்கு பருவ மழை தாமதமாகவே தொடங்கியது. இதனால், நவம்பர் தொடக்கத்தில் தான் உப்பு உற்பத்தியை, உற்பத்தியாளர்கள் நிறுத்தினர். அந்த சீஸனில், 95 சதவீதத்துக்கு மேல், அதாவது 24 லட்சம் டன் வரை உப்பு உற்பத்தியாகி இருந்தது.

ஆனால், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழக்கமாக பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை. மார்கழி பனியும் குறைந்து, வெயில் அடித்து வருவதால் அடுத்த சீஸனுக்கான பணிகளை உற்பத்தியாளர்கள் தற்போதே தொடங்கிவிட்டனர்.

**தரமாக இருக்காது**

இதுகுறித்து தூத்துக்குடி சிறிய அளவு உப்பு உற்பத்தியாளர் சங்கச் செயலாளர் ஏ.ஆர்.ஏ.எஸ்.தனபாலன் கூறும்போது, “தூத்துக் குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஜனவரி மாதம் தான் உப்பு உற் பத்திக்கான பணிகள் தொடங்கும். இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் சிலர் தற்போதே உப்பு உற்பத்தியைத் தொடங்கிவிட்டனர்.

ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங் களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்பதால், பெரும்பாலான உற்பத்தியாளர்கள் உற்பத்தியைத் தொடங்கவில்லை. மேலும், தற்போது உப்பு உற்பத்திக்கு உகந்த சீதோஷ்ணம் இல்லை. உப்பு அடர்த்தி 24 சதவீதம் இருந்தால் தான் தரமாக இருக்கும். ஆனால், தற்போது உற்பத்தியாகும் உப்பின் அடர்த்தி 18 முதல் 20 சதவீதம் தான் உள்ளது. எனவே, இந்த உப்புக்கு சரியான விலை கிடைக்காது.

மாவட்டத்தில் ஏற்கெனவே கடந்த சீஸனில் உற்பத்தி செய்யப்பட்ட 7 லட்சம் டன் உப்பு கையிருப்பில் உள்ளது. விலையும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. எனவே ஜனவரி மாதத்துக்கு பிறகே மாவட்டத்தில் உப்பு உற்பத்தி பணி முழு அளவில் தொடங்கும்" என்றார்.